பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 12 இ: ஆண்டு 16 இதழ் 73
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25 4 78

ஓர் இனத்திற்கு

# இன்னொரு சாரார்

## அரசியல் சாஸனம் எழுத வேண்டியதில்லை

### செல்வா நினைவாஞ்சலிக் கூட்டத்தில் திவாகர்

(யாழ்ப்பாணம்)

ஒரு நாட்டில் வாழுகின்ற இனத்துக்கு இன்னொரு சாரரால் அரசியல் சாஸனம் எழுதப்படவேண்டியதில்லை. மனித உரிமைகள் பற்றி பட்டயம் வகுக்கப்பட்டிருக்கும் இக்காலத்தில் அரசியல் சாஸனம் வகுத்துத்தரவேண்டியது அரசின் உரிமையாகும்.''

இவ்வாறு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற செல்வா நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலாநிதி ஆர். ஆர். திவாகர் பேசுகையில் கூறினார்.

"காந்தியும் இந்தியாவும்" என்னும் தலைப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்துக்கு செல்வா அறங்காவல் குழுத் தலைவர் பேராசிரியர் கு. நேசையா தலைமை தாங்கினார்.

கலாநிதி திவாகர் காந்திய சமாதானக் கவுன்சில் சார்பில் பேராசிரியர் நேசையாவிடம் மூன்று நூல்களை அன்பளிப்புச் செய்தார்.

காந்திய சிந்தனைகளை பெருமளவில் தாம் இங்கு கொண்டு

(6ம் பக்கம் பார்க்க)

# மங்கையர்க்கரசியின் பேச்சு பதற்றநிலையை ஏற்படுத்தியது

## அனுராதபுரத்தில் சன்சோனிக் கமிஷன் முன்

## ஆனைமடு மாஜி கி.ச. தலைவர்

(அனுராதபுரம்)

**"சிங்களவர்களின் இரத்த வெள்ளத்தில் நீச்சலடிப்போம், தமிழ்நாடு காண்போம்" என்று வவனியாவில் தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் திருமதி அமிர்தலிங்கமும் வேறு சிலருங் பேசினார்கள். ஆனமடுவ பகுதியில் சிங்களவர் மத்தியில் இது பயத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியது."**

இவ்வாறு நேற்று சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளித்த ஆனமடுவைச் சேர்ந்த முன்னாள் கிராமசபைத் தலைவர் எஸ். அப்புகாமி (42 வயது) கூறினார்.

கடந்த வருடம் நடைபெற்ற இனக்கலவரம் தொடர்பான விசாரணை நேற்றுக்காலை 9-30 மணிக்கு கமிஷனர் சன்சோனி தலைமையில் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

திரு. அப்புகாமி தொடர்ந்து சாட்சியமளிக்கையில்; திரு. சி. சிவசிதம்பரத்தை ஆதரித்து 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி வவனியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திருமதி அமிர்தலிங்கம் பேசினார்.

சிங்களவர் இரத்தத்தில் நீந்துவோம், தமிழ்நாடு காண்போம், என்று அவர் பேசினார். புல்பராசா, தர்மலிங்கம் ஆகியவர்களும் இதே முறையில் பேசினார்கள்.

**பொலிசாரை எதிர்த்தும் போராடுவோம்'**

தமிழ்நாடு காண்போம், நமது சொந்தப் பிரதேசத்தை இரத்தம் சிந்தியாவது காப்போம் என்று அவர்கள் பேசினார்கள். திரு. செல்வரட்ணம் என்பவர் பேசும்போது உரிமைகளைப் பெற பொலிசாரை எதிர்த்துப் போராடுவோம் என்று கூறினார்.

சிங்களவர், தமிழர், முஸ்லிங்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்த இப்பகுதியில் இப்பேச்சினால் பதற்றமும் ஏற்பட்டது. சிங்களவர்கள் பயத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

இதற்கு இப்பகுதியில் கடமையாற்றிய தமிழ் உத்தியோகத்தர்களும் காரணம். காணிகள் வழங்குவது, துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்குவது போன்றவற்றிலும் பாரபட்சம் காட்டப்பட்டது.

வவனிக்குளம் முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் சிங்களவர்களுக்கு நிலம் வழங்கப்படவில்லை. துவக்கு லைசென்ஸ்கள் நாறு

[6ம் பக்கம் பார்க்க]

### 49 பேர் சாட்சியமளிப்பர்

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு நித்தியானந்தா விசாரணையின்போது சமூகமளித்திருந்தார். பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் பாரிலட், சிற்றம்பலம், ஏ. பி. நைல்ஸ் கந்தசாமி ஆகியவர்கள் ஆஜராகியிருந்தனர். கிரேஷ்ட வழக்கறிஞர் தென்னக்கூன், கமிஷன் செயலாளர் நிஸ்ஸ தெய்வேந்திரா முதலானவர்களும் வந்திருந்தனர்.

இங்கு 9 சாட்சிகள் சாட்சியமளிக்கவிருக்கின்றனர். இம்மாதம் 29ம் திகதிவரை விசாரணை நடைபெறும். விசாரணை முடியாவிடில் நீடிக்கப்படும் என்று தெரிகின்றது.

பாதிக்கப்பட்ட இடங்களைப் போய்ப்பார்வையிடும்படி கமிஷனிடம் சட்டத்தரணிகள் கேட்கவிருக்கின்றனர்.

## தொழில் வங்கி வேலை ஜூலையில் கிடைக்கும்

(கொழும்பு)

தொழில் வங்கி மூலம் வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் இவ்வங்கிகள் ஊடாகத்தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஜூலை மாதத்தில் வேலை வழங்கப்படும்.

ஏற்கனவே அரசாங்க, கூட்டுத்தாபன சேவையிலிருந்து வேலை இழந்தவர்களுக்கு இவ்வங்கி மூலம் வேலை வழங்கப்படமாட்டாது.

இவ்வங்கிகள் மூலம் ஒருவருக்கு இரண்டு தடவைகள் மட்டுமே வேலை வழங்கப்படும். இரண்டு தடவைகளிலும் வேலையை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு எக்காரணம் கொண்டும் மீண்டும் வேலை வழங்கப்படமாட்டாது. [ம]

## யாழ். 'மினி பீச்'

### ஏப்ரல் 28-ல் திறக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர 'மினி பீச்' இம்மாதம் 28ந் திகதி மாலை, யாழ். அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப்பினால் திறந்து வைக்கப்படும்.

யாழ். மாநகரசபையினால் மாநகரசபை மண்டபத்திற்கும் பின்புறமாக இந்த 'மினி பீச்' அமைக்கப்பட்டுள்ளது.

இப்பீச்சுக்கு யாழ். மாநகரசபை இருக்கை வசதிகளுடன் விசேட மின்சாரவசதிகளையும் செய்துள்ளது. [கெ-இ]

URGENT

## திவாகரின் இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

காந்திஜி அறநிலையத் தலைவர் டாக்டர் ஆர். ஆர். திவாகர் இன்றுமாலை 5-30 மணிக்கு இரண்டாவது தடவையாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் உரையாற்றுவார்.

நல்லூர் எம் பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் இரண்டாவதுநாளாக நடைபெறும் தந்தை செல்வா நினைவாஞ்சலிக் கூட்டத்தில் டாக்டர் திவாகர் 'காந்திஜியும் உலகப் பிரச்னைகளும்' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார்.

**யாழ். வளாகத்தில்**

யாழ். வளாக திருநெல்வேலிப் பிரிவில் டாக்டர் திவாகர் மாலை 3 மணிக்கு உரை நிகழ்த்துவார். [கெ-இ]

## தந்தை செல்வா நினைவாஞ்சலி நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் தந்தை செல்வா முதலாண்டு நினைவு அஞ்சலி வழிபாடு நாளைக்காலை 7-00 மணிக்கு யாழ். நகரில் உள்ள செல்வா நினைவாலய மைதானத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் முஸ்லிம், கிறிஸ்தவ, கத்தோலிக்க, சைவ சமய குருமார்களின் வழிபாடும் சமயபக்திப்பாடல்களும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காந்திஜி அறநிலையத் தலைவரும் விடுதலைப் போராட்ட வீரருமான கலாநிதி ஆர். ஆர். திவாகரும் இந்த வழிபாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

தமிழ்நாடு ஆஸ்தானக் கவிஞர் கண்ணதாசன், இ. ஆ. பெ. விஸ்வநாதன் ஆகியோரும் நினைவாஞ்சலி வைபவத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெருந்தொகையான மாணவர்களும் பொதுமக்களும் இவ் நினைவாஞ்சலி வைபவத்தில் கலந்துகொள்வார்கள்.

இத்தினத்தை ஒட்டி தமிழ்ப் பகுதிகள் எங்கும் விசேட வழிபாடு நிகழ்ச்சிகளும் நினைவாஞ்சலி வைபவங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (கெ-இ)

முருங்கன் பொலிஸ் படுகொலை

## துரையப்பா வழக்கு எதிரி ஒருவர் கைது!

(யாழ்ப்பாணம்)

துப்பறியும் துறையைச் சேர்ந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் காரச்சாரதியும் முருங்கனில் படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் ஒருவர் மட்டக்களப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சுரேஷ் செல்வகுமார் என்பவரே கைது செய்யப்பட்டவரென்றும் இவர் துரையப்பா கொலை வழக்கில் எதிரியாகக் குற்றம் சாட்டப்பட்டவரென்றும் தெரிகிறது.

முருங்கனில் துப்பறியும் பொலிசார் படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமான புலன் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நேற்று யாழ்ப்பாணம் பகுதியில் ஹெலிகொப்டரும், விமானப்படை விமானமும் அடிக்கடி பறந்து கொண்டிருந்தன.

## வரி விளம்பரம்

### தேவை

வவுனியாவிலுள்ள வியாபார ஸ்தாபனத்துக்கு பத்து வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடைய வாள் றைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9082 கே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9082

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலை பழகுபவர்களும்தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவிஸொல் அன் பெற்றல்வேக்ஸ், நீர்வேலி. 8994

## கூட்டணிக் கிளை நிர்வாகிகள்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் கிழக்கு தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளையின் பொதுக்கூட்டம் சித்தின் கேணியிலுள்ள த. வி. கூட்டணிக் காரியாலயத்தில் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் மு. பாலசிங்கம், உபதலைவர்: சி. கனகசுந்தரம், செயலாளர்: க அமிர்தலிங்கம் உபசெயலாளர்: க. குமரகுரு, பொருளாளர்: க. தம்பையா பத்து செயற்குழு உறுப்பினர்களும் தெரிவாகினர். [உ]

## சீமெந்தும் பேசனும் இலவசம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர எல்லைக்குள் தங்கள் மலகூடத்தை தண்ணீர் முறையமைப்பிலான மலகூடமாக மாற்ற விரும்புவர்களுக்கு யாழ். மாநகரசபை அதற்கானபேசனையும் 5 பைக்கற் சீமெந்தையும் இலவசமாக வழங்கவுள்ளது. இதனைப் பெறவிரும்புபவர்கள் உடனடியாக மாநகர சுகாதாரப்பகுதியினருடன் தொடர்புகொள்ளுமாறு பொதுசுகாதாரசேவைப் பரிசோதகர் திரு. ஜகநாதன் கூறியுள்ளார். (ஈ-அ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல 84 அ — பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், இல. 55, விக்ரோறியா றோட்டு அம்பலவாணர் சரவணமுத்து என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

அம்பலவாணர் சரவணமுத்து மகள் பெண் இராஜராஜேஸ்வரி, இல. 17, (55) விக்ரோறியா றோட்டு, யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. த/ 3367

1. சரவணமுத்து திரிபுரசுந்தரி இல. 17 (55) விக்ரோறியா றோட்டு, யாழ்ப்பாணம்.
2. சரவணமுத்து பிரேமரஞ்சினி—டிை
3. கனகநாயகம் நல்லைநாதன், 375/7, நாவலர் றோட்டு, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். இவர் டிை 2ம் எதிர்வாதியாகிய பாராயமற்றவரின் வழக்கு பாதுகாவலர்.

எதிர்வாதிகள்,

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில், தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதிவப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ஆம் ஆண்டு வைகாசி மாதம் 5ஆம் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது தென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்
ஒப்பம்
பதிவாளர்.

1978 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 9023

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ-பிரிவுகள் 524,532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ்சென்ற பாக்கியம் வேலாயுதபிள்ளை என்பவரின் மரணசாதனத்தின்/ சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

சின்னத்தம்பி பொன்னையா வேலாயுதபிள்ளை, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்) இல. த. 3357

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 5ம் நாளன்று முற்பகல் 9 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி.
(ஒப்பம்)

V.C. பரமநாதன்
பதிவாளருக்காக

1978 ஆம் ஆண்டு தை மாதம் 18 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 9057

## அடைவு நகை ஏலவிற்பனை

கிளிநொச்சி கண்டி வீதி "சிவசக்தி" திரு. கா. சோமசுந்தரம் அவர்களிடம் 1-1-1977 முன் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 16-5-1978 செய்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனையாளர்.
643, கே. கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம், 9068

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம் கேள்விப்பத்திரம் வெற்றுச்சாக்கு

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் 7000 வெற்றுச் சாக்குகள் வரை விற்பனைக்குண்டு. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்திக் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப் பத்திரங்கள் 28-4-78 பிற்பகல் 3 00 மணி வரை வழங்கப்படும். 3-5-78ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகக் கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

பொதுமுகாமையாளர்
நல்லூர் ப.நோ. கூ. சங்கம்.
9119

## உள்ளூர்ப்படங்களை ஊக்குவிக்க நடவடிக்கை

[வெள்ளவத்தை]

உள்ளூர்த்திரைப்பட வளர்ச்சியை ஊக்கப்படுத்தற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. உபசேனநாயசிங்க கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

சிறுவர்களுக்கு படிப்பினையூட்டுமுகமாக படங்களைத் தயாரிக்கும் இறுவர் படத் தயாரிப்பாளர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுப்பதற்கு கூட்டுத்தாபனம் தனியான சபை ஒன்றை நியமித்துள்ளது. [உ]

## உலக்கையடி

[நெல்லியடி]

குடும்பத்தகராறு காரணமாக உலக்கையால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

புலோலி கிழக்கைச் சேர்ந்த மரியசம்பிள்ளை குருசமுத்து என்னும் நபரே இவ்வாறு தாக்கப்பட்டவராவார்.

இத்தாக்குதல் சம்பந்தமாக பருத்தித்துறை பொலிஸைச் சேர்ந்த எம் நாகரட்ணம் விசாரணைசெய்து வருகின்றார. சந்தேகநபரை பொலிசார் தேடிவருகின்றார்கள். (உ)

## கடவுள்சுவாமிகளின்ஜெயந்திதினம்

நிகழும் காலயுத்தி வருடம் சித்திரை மாதம் 15-ந் திகதி (28-4-1978) வெள்ளிக்கிழமை செல்வச் சந்நிதி கடவுள் சுவாமி (முருகுப்பிள்ளை சுவாமி) களின் ஜெயந்தி தினத்தைக் கொண்டாட சுவாமிகளின் அன்பர்கள் விரும்புவதால் அன்று செல்வச்சந்நிதி முருகனுக்கு விசேட அபிஷேகமும் ஆனந்தாச்சிரமத்தில் அன்னதானமும் நடைபெறும். அன்பர்கள் அடியார்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

இ. கனகரத்தினம், இப்படிக்கு
35/3, சுண்டுக்குளி, அன்பர்கள்
யாழ்ப்பாணம். 9117

## மரண அறிவித்தல்

### நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் குமாரசாமி சர்மா

சென சாவித்திரியின் அன்புக் கணவரும், நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் பிரதம குருக்களும், சிவஸ்ரீ குருசாமிக்குருக்கள் சீதாலட்சுமி அம்மாள் தம்பதிகளின் அருமைப் புத்திரனும், வைத்தீஸ்வரசர்மா, கோபாலசர்மா, கமலாதேவி, சகுந்தலாதேவி, சரோஜினிதேவி, சுந்தரலட்சுமி, ஜானகிதேவி, காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரனும், சுப்பிரமணியசாஸ்திரிகள், பசுபதீஸ்வரசர்மா, பரமேஸ்வர சர்மா, இராமசாமி சர்மா ஆகியோரின் மைத்துனரும், நீர்கொழும்பு மாரியம்மன்கோவில் நடராசக்குருக்களின் மருமகனும், சுலோசனு, மீனலோசனி, ஜெயலட்சுமி, விஜயலட்சுமி, யோகாம்பிகை, விஜயாம்பிகை, ஆனந்தகுருசாமிசர்மா, லலிதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், லக்சுமிதேவி, சரஸ்வதிதேவி, இராதாகிருஷ்ணன், பாலகிருஷ்ணன், நந்தினிதேவி, நிர்மலாதேவி, விசாலாட்சிதேவி, கல்யாணி ஜோதி, ராஜி, வாணி, கண்ணன், குமார், ஜெயா, விஜயா, வாசுதேவன் ஆகியோரின் அருமை மாமனும், கிருஷ்ணசாமிசர்மா, லக்சுமிநாராயணசர்மா, சேரமாஸ்கந்தசர்மா, ராஜகோபாலசர்மா, சுப்புலட்சுமி, இராமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனருமான சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் 23-04-78 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் செம்மணி மயானத்திற்குச் புதன்கிழமை [26-04-78] காலை 9 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.


இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்: சகோதரர்களும், மைத்துனர்களும், பிள்ளைகளும். 9118


## உங்களுடைய மின்சாரம் எங்கும் - எந்நேரமும்

HONDA®

ஹொண்டா ஜெனரேட்டர்



E 3500-சர்வ சக்திவாய்ந்த எடுத்துச் செல்லக்கூடிய மின்சக்தி சாதனம்- சுயமான வோல்டேச் கட்டுப்பாட்டு கருவியுடன், இக்கன இயக்கம் AC230V-3500W & DC12V. 100Wயுடன் வைத்தியசாலை, மருத்துவ இல்லங்கள், ஹோட்டல்கள், சினிமா மண்டபங்கள் முதலியவற்றின் பாவனைக்கு கைவசம் வைத்திருக்க நேர்த்தியானது.

E1500 & EG 1000 சிறந்த செயல்முறை-எல்லா இடங்களுக்கும் எடுத்துச்செல்லக்கூடியது. கணப்பொழுதில் இயங்குவது-சக்தி மாறுபாடு இல்லாதது.

எலெக்ரிக் 4 ஸ்ரோக் என்ஜின் AC230V-1500W & DC 12V. 100W & AC 230V. 1000 W & DC 12V. 100W நம்பகரமான பாவனை.

விற்பனையாளர்கள்
இலங்கையில்
ஹொண்டா ஜெனரேட்டர்களுக்கு
விற்பனையாளர்கள் தேவை

இலங்கை ரூபாவில் கிடைக்கும்
விற்பனைக்குப்பின்னுள்ள சேர்விஸ் வசதி உண்டு
சிறந்தவற்றை வாங்கும் மக்களுடன் சேர்ந்துகொள்ளுங்கள்

ஸ்டபோர்ட் மோட்டார் கம்பெனி லிமிட்டெட்,

"ஹொண்டா ஹவுஸ்"
718/7, மருதானை ரோட், கொழும்பு - 10.
தொலைபேசி: 94362

ஈழநாடு
The Eelanaadu

## அரசியலமைப்பும் பேச்சுவார்த்தையும்

அரசியலமைப்புத் திருத்தம், அடுத்த மாதம் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

அரசியலமைப்புத் திருத்தமென்றாலும், அது பெரும்பாலும் புதிய ஒரு அரசியல் அமைப்பாகவே இருக்கும் என்பது நிச்சயம்.

அரசியல் அமைப்புக்கு ஏற்கனவே கொண்டுவந்த இரண்டாவது திருத்தம், ஜனாதிபதிக்கு முழு அதிகாரங்களையும் கொடுத்து அரசியல் அமைப்பையே முற்றாக மாற்றிவிட்டதிலிருந்து இனிக் கொண்டுவரப்படும் திருத்தங்கள் புதிய அரசியல் அமைப்பாகவே அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமான உரிமைகள் வழங்கப்படுமென்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா ஏற்கனவே உறுதியளித்திருக்கிறார். தமிழ்மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணப் போவதாக அவர் சொல்லிவந்திருக்கிறார்.

அரசியலமைப்பைத் திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுவில் பங்குகொள்வதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி மறுத்துவிட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமானும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இத்தெரிவுக் குழுவில் பங்குபற்றினர்.

தெரிவுக் குழு, தனது வேலைகளை அநேகமாகப் பூர்த்தி செய்துவிட்டதாம்.

இந்த அரசியல் அமைப்பு, தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதை நன்கு பரிசீலனை செய்த பின்னரே, அது தொடர்பாக நடைபெறும் விவாதத்தில் கலந்துகொள்வதா இல்லையா என்பது பற்றிக் கூட்டணி முடிவு செய்யும் என்று கூட்டணியின் பேரவைக் குழுத் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என்பதிலும், அவர்களுக்கு, அவர்களது உரிமைகளை வழங்கவேண்டும் என்பதிலும் இன்று அரசியல் கட்சிகளுக்கிடையே வேறுபாடில்லை.

ஆனால் தமிழ் மக்களின் பிரச்னைகள் என்ன? அவர்களின் உரிமைகள் என்ன? என்பதில்தான் அரசியல் கட்சிகளுக்குள் வேறுபாடுகள் உள்ளன.

இன்று தமிழ்மக்களுக்குப் பிரதேச சுயாட்சி வழங்கப்படவேண்டுமென்ற அபிப்பிராயம் இடதுசாரிக் கட்சிகளுக்கிடையில் வலுப்பெற்றுள்ளது.

தமிழர்கள், இந்நாட்டின் தேசிய இனம் என்பதை லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா ஏற்றுள்ளார். இடதுசாரி ஐக்கிய முன்னணியும் இதை ஒப்புக்கொண்டுள்ளது என்றே சொல்லவேண்டும்.

தமிழர்களுக்குப் பிரதேச சுயாட்சி வழங்குவதன் மூலமே அவர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்ற கருத்து, இடதுசாரி ஐக்கிய முன்னணியில் மட்டுமல்ல, தீவிர இடதுசாரி இயக்கங்களின் மத்தியிலும் ஏகோபித்த கருத்தாகி இருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இன்றைய நிலை தெளிவில்லையானாலும், சென்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன், கடைசி நேரத்தில் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டது அனைவரும் அறிந்ததே.

பிரதேச சுயாட்சிக்கு ஆதரவு பெருகியிருக்கும் இச்சமயத்தில் இடதுசாரிகள் எவரும், பேரவையில் அங்கம் வகிக்காதது பெரும் குறை.

ஆனாலும் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்குச் சர்வகட்சி மாநாடு கூட்டப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தபடி, முதலில் இடதுசாரி இயக்கத் தலைவர்களுடனும் பேரவையில் அங்கம் வகிக்கும்; தமிழர் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண விரும்பிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினருடனும், ஜனாதிபதியும் பிரதமரும் கூடிப்பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வருவதே இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குச் சிறந்த வழியாகும். இதன் பின்னர் தமிழ்த் தலைவர்களுடன் பேசுவது பெரும்பயன் தருமென்று எதிர்பார்க்கலாம்.

புதிய அரசியல் அமைப்பைப் பேரவையில் சமர்ப்பிக்கு முன்னர் இத்தகைய பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதே சிறந்ததும் பயனுள்ளதுமாகும்.

"காங்கேசன்துறையிலிருந்து

# கொழும்புக்கு மேலதிக கடுகதி சேவை வேண்டும்"

## ரயில்வே விசாரணைக் கமிஷன்முன் யோகேந்திரா சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு மேலதிக கடுகதி ரயில் சேவையொன்று ஆரம்பிக்கவேண்டும். இந்த ரயில் காங்கேசன்துறையிலிருந்து காலை 5-30 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம், பளை, மாங்குளம், அனுராதபுரம், மகோ, கொழும்பு ஆகிய இடங்களில் மட்டும் நிறுத்தப்படவேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் மக்கள் கொழும்பில் தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு அன்று மாலை ரயிலிலேயே திரும்பவழி செய்யவேண்டும்."

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நடைபெற்ற கமிஷன் விசாரணையின்போது தமிழர் சோஷலிச முன்னணி சார்பில் சாட்சியமளிக்கையில் திரு. யோகேந்திரா துரைசுவாமி கேட்டுக்கொண்டார். முன்னணி சார்பில் திரு. டபிள்யு. ஏ. அரசுவால்டன், திரு. கேந்யோதிரா துரைசுவாமி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

கமிஷனில் திரு. கோபார்ட் ஜெயவர்த்தன (தலைவர்), திரு. ஏ. ஏ. பேய்ஜ், திரு. ஜி. எஸ். பெர்னாண்டோ ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். திரு. எஸ். யோகரத்தினம் செயலாளராகக் கடையாற்றுகிறார்.

கடுகதி ரயில் சேவை மிக அவசியம் தேவை என திரு யோகேந்திராதுரைசாமி தமது சாட்சியத்தில் கூறினார்.

### வடமராட்சிப் பிரயாணிகள்

ரயில் உத்தியோகத்தர்: பளை முக்கியமான நிலையமல்ல. வடமராட்சி மக்களுக்கு கொடிகாமம் தான் முக்கிய நிலையமாகி இருக்கிறது.

உடுப்பிட்டி, பருத்தித்துறை பிரயாணிகள் கொடிகாமத்தில் தான் ஏறுவார்கள். ஆதலால் பளைக்குப் பதிலாக கொடிகாமத்தில் நிறுத்தவேண்டும்.

திரு. யோகேந்திரா: கடுகதி சேவை அவசியம் தேவை.

கமிஷனர்: காலையில் யாழ்தேவி இருக்கிறதே?– ஆம். யாழ்தேவி ஆரம்பத்தில் 10 இடங்களில் மட்டும் நிறுத்தப்பட்டது. இப்ப 22 இடங்களில் நிறுத்தப்படுகிறது.

கமிஷனர்: மேலதிகமாக நிறுத்தப்படும் நிலையங்கள் வடக்கிலா தெற்கிலா? வடக்கிலும் தெற்கிலும் உண்டு. அந்தந்தப்பகுதி எம். பிக்கள் தலையிட்டதால் நிறுத்தப்படுகிறது.

கமிஷனர்: வடபகுதி எம். பி.க்களா? தென்பகுதி எம். பிக்களா தலையிட்டார்கள்?– இரண்டு பகுதி எம். பி.க்களும்.

### பஸ்சேவை பற்றாக்குறை

ரயில் உத்தியோகத்தர்: யாழ்தேவி ஆரம்பத்தில் காங்கேசன்துறையில் 5–30 மணிக்கு புறப்படுவதாயிருந்தது. பஸ்சேவை அதிகாலையில்லாதினால் பிரயாணிகள்வர முடியாமலிருந்தது. அதனால் இப்போ 6-10 க்கு புறப்படுகிறது.

திரு. அரசுவால்டன்: பிரயாணிகள் பெரும் கஷ்டப்படுகிறார்கள் சிலர் மலசலகூடத்திற்குள்ளே இருந்து செல்ல வேண்டியிருக்கிறது.

கமிஷனர்: அதுதெரியும் என்ஜின்கள் பெட்டிகள் கிடைக்கும் வரை எதுவும் செய்யமுடியாது.

திரு. அரசுவால்டன்: இம்கன்இழமைகளில் வவனியா வரை ஒரே நெருக்கமாக இருக்கிறது. பெண்கள் குழந்தை நின்றுகொண்டே செல்கின்றனர்.

கமிஷனர்: நாட்டுக்கு நன்மையாக எதுதோன்றுகிறதோ அது கடைப்பிடிக்கப்பட வேண்டும். வேலைத்தலத்தை பரவலாக்குவது பற்றி ஆலோசனை இருந்துவருகிறது. இன்று ரத்மலானை வேலைத்தலத்தில் 7000பேர் கடமையாற்றுகின்றனர். பதுளையில் வாகன்களை உருவாக்க ஒரு வேலைத்தலத்தை ஆரம்பிக்க எம். பி. ஒத்துழைப்பு நல்கியுள்ளார். மாதம் 25 வாகன்களை பதுளையில் திருத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது அனுராதபுரத்திலும் மரவேலைத்தளம் அமைக்க போதிய இடவசதியுண்டு. அங்கு பெட்டிகளைத் தயாரிக்கலாம். தனிப்பட்ட ஸ்தாபனங்கள் பஸ், லொறி, 'பொடி'களை அடிக்க முடியுமானால், ரயில் பெட்டிகளைத் தயாரிப்பதில் கஷ்டம் இல்லை. பதுளை, அனுராதபுரத்தில் வாகன் பெட்டிகளைச் செய்வதால், பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கலாம். அதேபோன்று யாழ்ப்பாணத்திலும் வேலைத்தளம் அமைப்பது பற்றி,என்ன கூறுகிறீர்கள்?

### புதிய அரசின் கொள்கை

யோகேந்திரா: யாழ்ப்பாணத்தில் அமைப்பது நல்ல ஆலோசனை. புதிய அரசின் கொள்கைப்படி கிராம இளைஞருக்கு வேலைவாய்ப்பளிக்க இது சந்தர்ப்பமளிக்கும். வேலைத்தளம்மட்டுமன்றி ரயில் நிர்வாகத்தையும் பரவலாக்கி, யாழ்ப்பாணத்திலும் ஒரு பகுதி இயங்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் பிராந்திய கந்தோர் ஆரம்பிக்கவேண்டும். எதற்கும் அனுராதபுரத்திலிருந்து அனுமதி கேட்கவேண்டியிருக்கிறது. இதனால் தாமதம் ஏற்படுகிறது இது மாற்றப்பட வேண்டும்.

திரு. மகேந்திரா: எல்லாவற்றிற்கும் கொழும்புக்கு போன் பண்ணவேண்டியிருக்கிறது. பதில்வர 4 மணி நேரமாகிறது. இதனால் தாமதம் ஏற்படுகிறது.

திரு. யோகேந்திரா: வடபகுதியில் ருமேனியா பெட்டிகளின் ஆசனங்கள் மிக நெருக்கமாக இருப்பதால், ஒருவருடன் மற்றவர் கால் முட்டியபடி பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. இது எங்கள் கலாச்சாரத்திற்கு ஒவ்வாததாகும். ஆதலால் இதனை மாற்றியமைக்கவேண்டும். ருமேனிய பெட்டிகளில் 2ம் வகுப்பிற்கும், 3ம் வகுப்புக்குமிடையில், சீட்டுகளில் வித்தியாசமுண்டு. 2ம் வகுப்பு பெட்டிகள் வசதி கூடியது; அவற்றை 3ம் வகுப்பு பெட்டியாக மாற்றவேண்டும்.

கமிஷனர்: மெயில் ரயில் 2ம் வகுப்பை மாற்ற வேண்டுமா? இல்லை யாழ்தேவியில் மாற்றவேண்டும்.

கமிஷனர்: கட்டணம்? 3ம் வகுப்புக் கட்டணமே அறவிடவேண்டும்.

### உறங்கல் இருக்கை

திரு. அரசுவால்டன்: உறங்கலிருக்கை பெட்டிகள் அதிகரிக்கப்படவேண்டும்.

கமிஷனர்: இதில் தொழில்நுட்பக் கஷ்டங்கள் உண்டு.

திரு யோகேந்திரா: கடுகதி வண்டிகள் 2 நிமிடம் மட்டுமே நிற்பதால் பிரயாணிகள் கஷ்டப்படுகிறார்கள். சுன்னாகத்தில் ஒரு பெண் தவறி விழுந்து இருகைகளையும் இழந்து விட்டார். 5 நிமிடமாவது நிற்க வேண்டும். ரயில் எவ்வளவு நேரம் நிற்குமென பிரயாணிகளுக்கு அறிவிக்கப்படுவதில்லை.

திரு. அரசுவால்டன்: அனுராதபுரத்தில் 20 நிமிடம் நிற்கிறது. யாழ்ப்பாணத்தில் 2 நிமிடமே நிற்கிறது. பெண்கள் அவசரப்பட்டு ஏறும்போது பாதணிகளையும் இழந்து விடுகிறார்கள். தற்போதுள்ள பெட்டிகளின் படிகள் அந்த விதத்தில் உள்ளது. யாழ்ப்பாணத்திலும் 5 நிமிடம் நிற்கவேண்டும்.

கமிஷனர்: ருமேனியா பெட்டு அப்படித்தான் அதற்கு தொழில்நுட்ப கஷ்டங்கள் உண்டு.

திரு. யோகேந்திர: யாழ்ப்பாணத்தில் திறமை மிக்க இளைஞர்கள் இருக்கிறார்கள். பெட்டிகளை இங்கு திருத்தலாம்.

கமிஷனர்: மரத்தட்டுப்பாடு இங்குமட்டுமல்ல உலக நாடெங்கும் உண்டு ஆதலால் அலுமினியம் உருக்கல்பெட்டிகள் தயாரிக்க ஆலோசனையுண்டு.

### வேலைவாய்ப்பு அளிக்கலாம்

திரு. யோகேந்திரா வேலைத்தலம் பரவலாக்கப்படுவதால் பெருந்தொகையானபணத்தை மிச்சப்படுத்துவதுடன் செலவைக்குறைத்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம்.

கமிஷனர்: யாழ்ப்பாண இளைஞர்கள் கணிதத்தில் மட்டும் திறமை மிக்கவர் என நினைத்தேன் தற்போது அவர்கள் மெக்கானிக் துறையிலும் திறமையுள்ளவர்கள் என அறிகிறேன். மெக்கானிக்கில் திறமை மிக்க இளைஞர்களின் சேவையை இங்கு பெறமுடியுமா?– ஆம்.

[5-ம் பக்கம் பார்க்க]

# பிராந்திய மொழியே ஆட்சிமொழி:

## தேசாயின்கருத்துக்கு வி. பி. பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"பிராந்திய மொழிகளே அந்தந்தப் பிராந்தியங்களின் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்று பாரதப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் வெளியிட்டுள்ள கருத்து வரவேற்கத்தக்கது. இக்கருத்து இலங்கைக்கும் முன் உதாரணமாக விளங்கவேண்டும்."

இவ்வாறு செந்தமிழர் இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் சுன்னாகம் மயிலணிவடக்கு விளையாட்டுக் கழகத்தின் 2 வது வளர்பிறை ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் சொன்னதாவது;

"சோஷலிச சமுதாய அமைப்பில் இனப் பிரச்னை அற்றுப் போவதால் சோஷலிசத்திற்கான போராட்டத்தை முதலில் நடாத்திவிட்டு இனப் பிரச்னையைப் பற்றி பின்னர் சிந்திக்கலாம் என்று நினைப்பதோ அல்லது இனஉரிமையை வென்றெடுக்கும் வரைக்கும் சாசர்மத்திற்கான போராட்டத்தை பின்போடலாமென்று நினைப்பதோ சரியான பாட்டாளிவர்க்க அணுகுமுறை ஆகாது;

உணவுப் பிரச்னையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் புதிய அரசாங்கம் பின்பற்றும் பொருளாதார கொள்கைகளினால் மேலும் சிக்கலாகுமே தவிர இப்புதிய அரசு தீர்வு காணப் போவதில்லை.

தேசத்தின் எந்தப் பிரச்னையையும் புதிய அரசு தீர்க்கக்கூடிய நிலையில் இல்லை. இந்நிலையில் நாட்டின் சகல ஜனநாயக சக்திகளும் ஸ்தாபன ரீதியாக திரண்டு அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் நடத்தவேண்டிய அவசரமும் அவசியமும் இன்று தோன்றியுள்ளது.

பாராளுமன்றத்தில் மிக பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட அரசிற்கு எதிராக, நிர்வாக அதிகாரம் அனைத்தையும் தன்கையில் குவித்துவைக்கும் ஒரு ஜனாதிபதி அமைப்பிற்கு எதிராக வெகுஜன போராட்டம் நடாத்துவது இலகுவானதல்ல இன, மத, வேறுபாடுகளின்றி மக்கள் ஐக்கியபட்டு நடாத்தும் போராட்டமே பலன் தரக்கூடியதாக அமையும்.

அரசாங்கத்தின் சமூக விரோத ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டம் நடாத்தும் அதே

[5-ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

பயனற்ற வார்த்தைகளைப் பேசுவதைவிட மௌனம் சாதிப்பது மிக மேலான செயலாகும்.. —பெர்னாட்ஷோ

லெபனனில்

# இராணுவ நடவடிக்கைகள் தற்காலிக நிறுத்தம்

லண்டன், ஏப். 24

லெபனனில் இராணுவ நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படவிருக்கின்றன.

பாலஸ்தீனியத் துருப்புகள் உட்பட ஏனைய இராணுவ நடமாட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்படவுள்ளன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

லெபனனின் அரசியல் கட்சித் தலைவர்களும் பொது ஸ்தாபனபிரதிநிதிகளும் கொள்கையளவில் இம்முடிவை ஏற்றுள்ளனராம்.

ஜனாதிபதி திரு. சர்க்கிஸ் தலைமையில் இது தொடர்பான கூட்டம் நடைபெற்றது. லெபனன் அரசு கடந்த புதன் ராஜினாமாச் செய்தது தெரிந்கிழமை தனது பதவியிலிருந்து ததே. (உ)

# தென்னுபிரிக்காவுக்கு எதிராக மே. நாடுகள் போர்க்கொடி!

லண்டன் ஏப். 24

நமீபியாவைவிட்டு தென்னுபிரிக்கா வெளியேறவேண்டும் என்று ஐ. நா. பொதுச்சபை தனது விசேட கூட்டத்தில் வலியுறுத்தவிருக்கிறது.

தென்னுபிரிக்காவுக்கு எதிராக பொருளாதாரத்தடை, எண்ணெய் விநியோகத்தடை என்பனவற்றை 5 மேற்கு நாடுகள் வலியுறுத்தவிருக்கின்றன. (உ)

சங்கானை ப. நோ. கூ. ச. மின்தறியில்

## திருடப்பட்ட துணியின் ஒரு பகுதி மீட்பு!

(சங்கானை)

சங்கானை ப. நோ. கூ. சங்க மின்தறி ஆலையில் அண்மையில் திருட்டுப்போனதாகக் கருதப்படும் புடவைகளில் ஒரு பகுதி சங்கானை சங்கரத்தை வீதியில் "கொத்தனைத்திட்டி" என்னும் இடத்தில் பற்றைகளுள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் ஆடுமேய்க்கும் இருவர்களே இதனைக் கண்டு அயலவர்களிடம் தெரிவித்து பின் சங்கானைப்பொலிசாரிடம் புகார்செய்யப்பட்டு பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

ஏழாயிரம் ரூபா பெறுமதியான துணிவகைகள் அண்மையில் இச்சங்க மின்தறியில் திருடப்பட்டது தெரிந்ததே. (இ)

## சுதந்திரக்கட்சி அங்கம் வகிக்காது

(கொழும்பு)

அரசின் புதிய திட்டத்தின்படி அமைச்சுக்களுக்கு ஆலோசனை வழங்கும்பொருட்டு நியமிக்கப்படும் கமிட்டிகளில் சுதந்திரக்கட்சி அங்கம் வகிக்காது என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய அரசுப் பேரவையில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த ஆலோசனைக் கமிட்டிகளில் அங்கம் வகிக்கும். (க-இ)

ஹோமியோபதிசங்கம்

## கொழும்பில் இன்று கூட்டம்

(கொழும்பு)

இலங்கை ஹோமியோபதி மருத்துவ சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பு செஞ்சிலுவைச்சங்க மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

நாட்டின் பலபாகங்களிலுமுள்ள ஹோமியோபதி டாக்டர்கள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

சங்கச்செயலாளர் திரு டி. வைத்தியசேகரா கூட்ட ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (அ)

## ஏ. ஜி. ஏ. நியமனம்

[யாழ்ப்பாணம்]

மல்லாகத்திலுள்ள காங்கேசன்துறை அபிவிருத்திச்சபையின் தொழிற்கூடத் தலைவராக வலி வடக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. கே மகாதேவாவும், உறுப்பினராக சட்டத்தரணி திரு மு. திருநாவுக்கரசுவும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ)

"நிர்வாக மொழிகளாக

## பிராந்திய மொழிகளே இருக்க வேண்டும்'

### பாரதப் பிரதமர் கருத்து

புதுடில்லி, ஏப்: 24

"பிராந்திய மொழிகளே அந்தந்த பிராந்தியங்களின் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும்" என்று பாரதப் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் கருத்து வெளியிட்டுள்ளார்.



புதுடில்லியில் நேற்று நடைபெற்ற இலக்கிய மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திரு. தேசாய் மேற்கண்டவாறு சொன்னார். (உ)

# கர்நாடகத்திற்கு தமிழக மின்சாரம்

சென்னை, ஏப். 24

கர்நாடக மாநிலத்திற்கு தமிழ்நாடு, கேரளமாநிலங்கள் நாள்தோறும் மின்சாரம் வழங்கவிருக்கிறது எனத் தெரியவருகிறது.

இது தொடர்பாக மூன்று மாநிலங்களின் மின்துறை அமைச்சர்களும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் சென்னையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றனர்.

பொலிஸ் துப்பாக்கிச்சூடு:

## நீதிவிசாரணைக்கு தமிழக கங்கிரசும் கோரிக்கை

சென்னை, ஏப். 24

தமிழ்நாட்டில் விவசாயிகள் போராட்டத்தின் போது நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பற்றி நீதிவிசாரணை நடத்தப்படவேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சென்னையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கைதான விவசாயிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் விவசாயத்தலைவர்கள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்படவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. [உ]

## சமாதான முயற்சி அதிருப்தியடையவில்லை

### எகிப்திய அதிபர் கருத்து

கெய்ரோ, ஏப். 24

இஸ்ரேலுடனுன எகிப்தின் சமாதான பேச்சுவார்த்தைகள் இன்னமும் அதிருப்திநிலையை அடைந்து விடவில்லை என்று எகிப்திய அதிபர் அன்வர் சதாத் நேற்று கெய்ரோவில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

இதேவேளை ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன் மத்திய கிழக்கு விவகாரம் குறித்து கருத்து வெளியிடுகையில் இஸ்ரேலின் விடாப்பிடியான போக்கைக் கண்டுபிடித்தார்.

அரபு நாடுகளின் ஐக்கியமின்மையும் இந்த இழுபறி நிலைக்கு ஒருகாரணம் என்றார் அவர்.

அரபு நாடுகளிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த தாம் முயற்சி மேற்கொள்ளப்போவதாகவும் அவர் தெரிவித்தார். [உ]


வெங்காயம், மிளகாய்ப் புழுக்கள்



இனித் தப்பவே முடியாது!

அம்புஷ்

எல்லாப் புழுக்களையும் அறவே அழிக்கிறது

ஒரு திரவ அவுன்ஸ் அம்புஸ்சை 20 கலன் நீரில் கலந்து தெளிக்கவும், ஏக்கருக்கு இரண்டு திரவ அவுன்ஸ் அம்புஸ்சை பாவிக்கவும்.

CIC கெமிக்கல் இண்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட், 352 ஹேமாஸ் கட்டிடம் கொழும்பு 1.

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
வாடைக்காற்று

நாகம்மாள்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
விஜயகுமார்
நடித்த
தாயில்லாக்குழந்தை

Rio (Jaffna) (Phone; 7607)
Now showing
SWEENY
From 27th
Man in the Iron Mask
New Realese (Color)

4-வது வெற்றி வாரம்
ராணி (யாழ்; நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ; ஈ, மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

Regal (Jaffna)
Daily 4-45, 7-00 and 9-30 p.m.
SPORTING CHANCE
(Colour) (Spy Film)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ்
நடித்த
நல்லநேரம்

4வது ஜனத்திரள் கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
இதுவரை யாழ். நகரில் திரையிடப்பட்ட பழைய படங்களின் வசூலை முறியடித்து சாதனை புரிகிறான்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா
நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7643;
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
3-வது ஜனத்திரள் வாரமாக வீரநடை போடுகிறது !
இன்னும் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
சிவாஜி நடிக்கும் கந்தன்கருணை ஈஸ்ட்மன் கலர்
பக்திப் பரவசமூட்டும் "கந்தன் கருணை" காண வாரீர்!

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.--வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692 கடைசி வாரம்
(யாழ். நகர்)
சிவபாதவிருதயர், சந்திரகலா
நடித்த
தென்றலும் புயலு


# தியேட்டர் 'கன்ரீனி'ல் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பட்டப்பகலில் சினிமாத் தியேட்டர் ஒன்றின் 'கன்ரீன்' உடைக்கப்பட்டு அங்கிருந்த சோடாப்போத்தல்கள், ரொபி இனிப்பு வகைகள் பாட்டுப் புத்தகங்கள் ஆகியன களவாடப்பட்டுள்ளன. இச்சம்பவம் பண்டத்தரிப்பில் நடைபெற்றுள்ளது.

பண்டத்தரிப்பிலுள்ள சினிமாத் தியேட்டர் ஒன்றின் 'கன்ரீன்' அங்கு ஒருவரும் இல்லாதநேரம் பார்த்து கதவை உடைத்து இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக தியேட்டர் உரிமையாளர் சங்கானை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுசெய்ததையடுத்து பொலிசார் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை நடாத்தினர். இதுவரை இத் திருட்டு தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. இத் தியேட்டர் 'கன்ரீன்' கடந்த மாதமும் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளதாகவும் பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது முறை நடைபெற்ற திருட்டாகும். (இ)

---

# 'செந்தமிழர் இயக்கத்துடன் இணையவில்லை'

(வண்ணார்பண்ணை)

"இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி, செந்தமிழர் இயக்கத்துடன் இணையவில்லை. இணைந்துள்ளது எனக் கருத்தும் பரப்பப்பட்டு வருவது எமது முன்னணியை பிளவுபடுத்த சில பிற்போக்குச் சக்திகள் செய்யும் விஷமப்பிரசாரமாகும்" என்று யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நடந்த இலங்கை சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி யாழ். கிளையின் பொதுக்கூட்டத்திற்கு தலைமைவகித்த திரு. எஸ். எம். துரைராசா பேசுகையில் கூறினார்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் இனத்தின் நீதியான உரிமைகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் முன்னணி தொடர்ந்து பாடுபடவேண்டும் என்று கூறும் தீர்மானமும், செந்தமிழர் இயக்கத்துடனோ, அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியுடனோ அரசியல் ரீதியான எந்தவித தொடர்பும் இந்த முன்னணி வைத்துக்கொள்வதில்லை என்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (அ)

---

# பிராந்திய

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வேளை இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டமும் நடாத்தியாக வேண்டும்.

செந்தமிழர் இயக்கம் தன் முன்னால் உள்ளபொறுப்பை பணியை பூரணமாக உணர்கிறது. உரிமை இழந்து நிற்கும் இனங்களின் பக்கம் நின்று போராட தமிழின விடிவை ஏனைய ஜனநாயக சக்திகளுடன் சேர்ந்து நின்று வென்றெடுக்க, செங்கொடி தாங்கி முன்செல்வோம் வெல்வோம்.

உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கமும் பேசினார்.


வெலிங்டன்
(சாவகச்சேரி)
தினசரி
6-30, 9-30
சிவாஜி - மஞ்சுளா
மனிதனும் தெய்வமாகலாம்


# கொழும்புக்கு—

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கமிஷனர்: அனுராதபுரத்தில் எவ்வளவு தொகையாவும் புகையிரத இலாகாவுக்கு சொந்தமான நிலம் பெற முடியும் யாழ்ப்பாணத்தில் இல்லை.

திரு. யோகேந்திரா: சமீபத்தில் உள்ள நாவற்குழியில் நிலம் பெறலாம்.

திரு தெய்வேந்திரா: ரயில்கள் தாமதிப்பதால் பிரயாணிகள் கஷ்டப்படுகின்றனர்.

திரு. யோகேந்திரா: பிளட்பாரத்திற்கு கிட்டத்தான் சங்கிலி இழுக்கப்படுகிறது. யாராவது பிரயாணி குறிப்பாக பெண்கள் அல்லது வயோதிபர் ஏறவோ இறங்கவோ முடியாமல் கஷ்டப்படும் போதுரயில் புறப்பட்டு விட்டால் சகபிரயாணி சங்கிலி இழுத்து விடுகிறார் பிரயாணிகள் நெருக்கத்தினால் இந்நிலை ஏற்படுகிறது.

திரு. யோகேந்திரா: இரவு ரயிலில் ரயில்பாதுகாவலர் சேவைக்கு அமர்த்தப்படவேண்டும்.

ரயில் உத்தியோகத்தர்: 6 பொலிஸார் சிவிலிலும் 2 இராணுவத்தினரும் பாதுகாப்பாக செல்கின்றனர்.

திரு. யோகேந்திரா: எல்லா பாதைகளுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

திரு: அரசு இரவு ரயிலில் வெளிச்சமில்லை. பகலில் காற்றுடி வேலை செய்வதில்லை. இரவில் லைட் இல்லாததினால் களவுகள்நடக்கிறது. முடிச்சுமாறிகளுக்கு வசதியாகவிருக்கிறது. மாங்குளத்திற்கும் வவனியாவிற்குமிடையில் ஒரு நாள் லைட் அணைந்துவிட்டது. இதுபற்றி ரயில் நிலைய அதிபர்களுக்கு புகார் செய்தும் பயனில்லை. இதனால் அரைமணி நேரம் தாமதம் ஏற்பட்டது.

கமிஷனர்: பிரயாணிகள், பல்புகளையும் வயர்களையும் கழட்டிவிடுகின்றனர். ரயில் நிலைய அதிபர் என்ன செய்ய முடியும்?

திரு. மகேந்திரா: பிரயாணிகளல்ல. விஷயம் தெரிந்தவர் செய்கின்றனர்.

திரு. யோகேந்திரா: ஒவ்வொரு ரயிலிலும் முதலுதவி பெட்டியிருக்கவேண்டும்.

கமிஷனர்: காட்மாரிடம் முதலுதவி பெட்டிமட்டுமன்றி 'ஸ்ரெச்சரும்' இருக்கிறது.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபன யாழ். அலுவலகத்தைச் சேர்ந்த திரு. எல். சி. ஐயாத்துரையும் சாட்சியமளித்தார்.

வட இலங்கை பிரயாணிகள் சங்க சார்பில் தலைவர் திரு. ஈ. வி. இராமநாதனும் செயலாளர் திரு. எல். சி ஐயாத்துரையும் கூறியதாவது:

வேகமுள்ள புகைவண்டி வடபகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்படும்படியும், புகையிரதங்கள் தாமதமாகிவருவதால் மக்கள் மிகவும் கஷ்டமான நிலைக்கு உள்படுத்தப்பட்டிருக்கிறார்களெனவும் குறிப்பாக அரசாங்க கூட்டுத்தாபன, வங்கி, வர்த்தக ஊழியர்கள், பாடசாலைப் பிள்ளைகள், ஆசிரியர்கள் தங்கள் கடமைகளுக்கு நேரத்திற்கு போக முடியாமை இருப்பதுபற்றியும் இவர்கள் எடுத்துக்காட்டினர்.

## யாழ். பாவனையாளர் சங்கம் சாட்சியம்

யாழ். பாவனையாளர் சங்கம் சார்பில் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஏ. அன்ரனி, திரு. எஸ். திருநாவுக்கரசு திருமதி இராசதுரை சாட்சியமளித்தனர்.

சட்டத்தரணி ஏ. அன்ரனி கூறியதாவது: வார இறுதி டிக்கட்டுகளையும் இருநாள் டிக்கட்டுகளையும் மீண்டும் அமுலுக்கு கொண்டுவரவேண்டும்.

கமிஷனர்: இதனை உங்கள் எம். பி. யின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். (யாழ். எம். பி. திரு. சி. யோகேஸ்வரன் சமுகமளித்திருந்தார்)

திரு. அன்ரனி: ஆம் அதே நேரம் இக்கமிட்டியும் உதவலாம்.

## விசாரணைக்கு உட்பட்டதல்ல

கமிஷனர்: இவ்விஷயம் ரயில் இலாகா நிதியை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும் எங்கள் விசாரணைக்கு உட்பட்ட விஷயமல்ல.

திரு. திருநாவுக்கரசு: ரயிலின் வேகத்தை அறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் இது அவசியமானது.

கமிஷனர்: தற்போதைய வேகம் மணிக்கு 45மைலாகும். பிரயாணிகளுக்கு பல கஷ்டங்கள் உண்டு. மேலதிக பெட்டிகளும், என்ஜின்களும் பெறும் வரை இப்பிரச்னை தீராது இது எங்களுடைய தவறல்ல. 7 வருடத்திற்கு முன் நடந்த தவறு என்ஜின்கள் இல்லை. பெட்டிகள் இல்லை. எப்படியும் இவ்வருட இறுதிக்குள் கஷ்டங்கள் தீரும்.

கமிஷனர்: உறங்கலிருக்கையை மாற்றி மீண்டும் 2-ம் வகுப்பு 'பேர்த்' கொண்டுவரக் கஷ்டம் ஏற்படும்.

திரு. அன்ரனி: மக்கள் 1-ம் வகுப்பு 'பேர்த்'தால் போகமுடியாது. 2-ம் வகுப்பு 'பேர்த்' தேவை உறங்கலிருக்கையும் இருக்க 2-ம் வகுப்பு 'பேர்த்'தும் தரவேண்டும்.

கமிஷனர்: அதற்கு நாளெடுக்கும்.

திரு. பேய்ஜ்: தொழில்நுட்ப காரணங்களுக்காகவே ருமேனியா பெட்டி இங்கு போடப்பட்டுள்ளது.

கமிஷனர்: மலைநாட்டுக்கு இங்கு ருமேனியா பெட்டிஏற்றதல்ல. இதனால்தான் வடக்கிற்கும், மாத்தறைக்கும் போட்டிருக்கிறோம். ருமேனியா பெட்டிகள் வடபகுதிக்கும் போய்விட்டதாக பதுளை எம். பி. புகார்செய்தார் நான் அவருக்கு நிலைமை விளக்கியதும் ஏற்றுக்கொண்டார்.

கிறிஸ்தவ சேவா சங்கச் செயலாளர் திரு. எம். செல்லத்துரை, யாழ். மரடிப்போமனேஜர் திரு. ஆர். பொன்னம்பலம், ரயில் பிரயாணிகள் சங்கத்தைச் சேர்ந்த திரு. இரத்தினானந்தம், திருமதி கிறிஸ்டின், திருமதி சுப்பிரமணியம் ஆகியோரும் சாட்சியளித்தனர்.

கன்னாகம், காங்கேசன்துறை ரயில் நிலையங்களைக் கமிஷன் நேரில் பார்த்தபின் கொழும்பு சென்றது.

---

# நாவாந்துறை சென்நீக்கிலஸ் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை புனித நீக்கிலாஸ் திருநாள் கடந்த 20ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 29ம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறும் கூட்டுப்பலி பூசையுடனும் திருச்சொருப பவனியுடனும் விழா முடிவடையும்.

பிற்பகல் விளையாட்டுப் போட்டிகளும் கலைவிழாவும் நடைபெறும். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆர். எம். ஜி. நேசநாயகம் பரிசுகளை வழங்குவார். (அ)

---

# சைவ அறநிலையங்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவ அறநிலையங்களின் ஒன்றியம் தவத்திரு பரமானந்த சுவாமிகள் தலைமையில் கைதடியில் நடைபெற்றது.

தலைவராக திரு. க. ஞானசந்திரனும், உப தலைவராக திரு. க. தங்கத்துரையும், செயலாளராக திரு. வே. கதிரவேலுவும், உப செயலாளராக திரு. ஆ. கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# 'வசதிபடைத்த ஒருசிலரிடம் பதவிகள் வழங்கப்படக் கூடாது!

## அதிகாரம் பரவலாகவேண்டும் என்பதே புதிய அரசியலமைப்பின் நோக்கம்' - பிரதமர்

[கொழும்பு]
வசதிபடைத்த ஒரு சிலரிடம் முக்கிய பதவிகளை வழங்காமல் அதிகாரங்களை பரவலாக்க வேண்டும் என்பதே புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்."

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா களுத்துறையில் கூறினார்.

களுத்துறை நகர மண்டபத்தில் நடைபெற்ற களுத்துறை மாவட்ட அரசாங்க அதிகாரிகள் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

### புதன் சந்திப்பு

அரசின் அபிவிருத்தித்திட்டங்களில் அரசாங்க அதிகாரிகள் முழுமையாகப் பங்கு கொள்ளவேண்டும். இத்திட்டத்திற்கமைய ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அரசாங்க அதிகாரிகள் பொது மக்களைச் சந்தித்து அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து உரையாடவேண்டும் என்றும் பிரதமர் கூறினார். (இ)

## எழுதுவினைஞர் சங்க மேதினம்

[யாழ்ப்பாணம்]
அரசாங்க எழுது வினைஞர் சங்கம், தனது மேதினத்தை மொழிவழித் தொழிற்சங்கங்களுடன் இணைந்து நடாத்துவதென தீர்மானித்துள்ளது.

மொழிவழித் தொழிற்சங்கங்கள் நடாத்தும் ஊர்வலம் முத்திரைச்சந்தையில் ஆரம்பமாகும்போது சகல அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் கிளைச் சங்க செயலாளர் திரு. ச. ஸ்ரீபதிவேண்டுகோள் விடுத்துள்ளார். (கெ-இ)

## ராஜகோபுரத்தின் மீது கருடன் (பருந்து) பறந்தது!

### கும்பாபிஷேகத்தின்போது அதிசயம்

(யாழ்ப்பாணம்)
வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமான் கோயிலின் ராஜகோபுர, மணிக்கோபுர மகாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை பக்திசிரத்தையுடன் மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

வெய்யில் கொளுத்திவெறியும் இந்நாளில் ராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற்ற சமயத்திலும் பின்னர் மாலையிலும் வானம் ஐப்பும் மந்தாரமுமாக இருந்து பெருந்திரளாகக் கலந்துகொண்ட மக்களுக்கு ஆறுதல் அளித்ததும் என்பது அடி உயரத்துக்கு மேலான ராஜகோபுரத்தின் மீது பிரதிஷ்டாபூஷணம் ஸ்ரீ சாமிவிஸ்வநாதக் குருக்கள் கும்பாபிஷேகம் நடத்திக் கொண்டிருக்கையில் வானத்தில் பருந்து ஒன்று வட்டமிட்டுக் கொண்டிருந்ததும் பக்தர்களைப் பரவசத்திலாழ்த்தி 'கோவிந்தா நாராயணா அரோகரா' என்ற கோஷங்கள் வானளாவ எழுப்பச் செய்தன.

(இந்த பக்தி பூர்வமான நிகழ்ச்சி பற்றிய கட்டுரை இவ்வாரம் 'ஈழநாடு' வாரமலரில் வெளிவரும். -ஆர்)

## வருடாந்த மகாநாடு

[வெள்ளவத்தை]
"தொழிலாளர் தேசிய சங்கத்தின் எட்டாவதுவருடாந்த மாநாடு மே மாதம் 13, 14ம் திகதிகளில் அட்டனில் நடைபெறும்.

மாநாட்டின் இறுதிநாளன்று கலைநிகழ்ச்சிகளும் பொதுக் கூட்டமும் நடைபெறும். [உ]

## இராசதுரை பங்குபற்றுவார்

[யாழ்ப்பாணம்]
நல்லூர் சந்தை மைதானத்தில் நாளை புதன்கிழமை மாலை நடைபெறும் மூதறிஞர் தந்தை செல்வா நினைவாஞ்சலிக் கூட்டத்தில் மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரையும் கலந்து கொள்வார் என கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

திரு. கி. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சகல கூட்டணி எம். பிக்களும் பிரமுகர்களும் உரை நிகழ்த்துவர். [இ]

## சேலை விநியோகத்தில் மோசடியாம், எம். பிக்கு புகார்

[சங்கானை]
வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட 'நைலெக்ஸ்' சாறி விற்பனையில் சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் மோசடி நிகழ்ந்துள்ளதாக வட்டு. எம். பி.க்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு ஆக்க ஆணையாளரின் சுற்றுநிருபத்திற்கிணங்க லொத்தர் மூலமோ அல்லது பங்கிட்டு அட்டை முறைப்படியோ விநியோகிக்கப்பட வேண்டிய சேலைகளில் ஒரு பகுதியை சங்க புடவை இல்லறை விற்பனை நிலையத்தில் சங்க பாவனையாளர் அல்லாத உயர் அதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதற்காக சங்க நிர்வாகம் தன்னிச்சைப்படி நடத்துள்ளதாம்.

இதேவேளையில் கிளைகளுக்கும் தனியார் கூப்பன் கடைகளுக்கும் விநியோகிக்கப்பட்ட சேலைகளை விற்பனை செய்வதற்கு போதிய அறிவித்தலும் அவகாசமும் கொடுக்கப்படாமல் திரும்பவும் எடுக்கப்பட்டுள்ளதாம். [இ]

## ஓர் இனத்திற்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வருவதற்கு முயன்றும் விமான மார்க்கமாக வந்தமையால் அவற்றைக்கொண்டுவர முடியவில்லையென்றும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

திரு. திவாகர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்று மூதறிஞர் செல்வா நினைவாஞ்சலிக் கூட்டத்தில் பேச என்னை அழைத்திருக்கிறீர்கள். பெருமதிப்புக்குரிய அமரர் செல்வநாயகத்தின் பண்புகளை அவரது தொண்டுள்ளம் நிறைந்த வாழ்க்கைதனை மதிப்பளித்து இன்று பெருந்திரளாக இங்கு கூடியிருக்கின்றீர்கள். இதனையிட்டு நான் பூரிப்படைகிறேன்.

### நினைவுச் சின்னம் அவசியம்தான்

அன்னாரின் பெயரில் நினைவாலயம் ஒன்றை அமைக்க முன்வந்து அமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறேன். நினைவுச்சின்னம் அவசியம்தான். கோட்டை கொத்தளங்கள் எத்தனையோ நிறுவி அழிந்ததை சரித்திரங்கள் சான்று பகருகின்றன. ஆனால் அன்னாரின் தொண்டுகளையும் பணிகளையும் சொற்கள் வடிவில் நினைவுபடுத்துவது என்றுமே அழியாது.

### நெருக்கடி நிலை...

இந்தியாவில் அவசரகால நிலைமையின் போது இடம் பெற்ற அடக்குமுறை காரணமாக மக்கள் அஹிம்சை வழியில் காந்தியசிந்தையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

காந்திஜி ஆத்மபலத்தைக் கொண்டு அஹிம்சையின் வழியில் இந்தியாவை சுதந்திரத்திற்கு இட்டுச்சென்றார். காந்திஜி மக்களுக்காக தொண்டுள்ளத்துடன் இயங்கியமையால், முழு இந்திய மக்களுமே அவர் வழியில் சென்றனர்.

இலங்கை எமது அந்நிய நாடாக இருந்தாலும் எமது மக்களும் இந்நாட்டு மக்களும் கலை, கலாச்சாரம் பண்பாட்டால் ஒன்றிணைந்தவர்கள்.

### அமிரைத்தழுவினார்

திரு திவாகருக்கு நன்றி தெரிவித்த, எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், மாலை அணிவித்து கௌரவிக்கச் சென்ற சமயம், திரு திவாகர், அப்போது மாலையைக் கையில் வாங்கி அவரை அன்புடன் கட்டித்தழுவினார். (கெ-இ)

## மங்கையர்க்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தமிழருக்கு வழங்கப்பட்டால் 10 சிங்களவர்களுக்குத்தான் வழங்கப்பட்டது. என்றார் திரு. அப்புகாமி.

14 ஆண்டுகள் தான் கிராம சபைத் தலைவராக இருந்துள்ளதாகக் கூறிய திரு. அப்புகாமி, ஆகஸ்ட் கலவரம் ஏற்பட்டது தமக்குத் தெரியும் என்றும் ஆனமடுவவைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவரின் வீடு ஆகஸ்ட் 19-ம் திகதி தீக்கிரையாக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சுப்பிரமணியம் தமது வீட்டில் கைக்குண்டுகள் சேர்த்து வைத்திருந்தார் என்று அவரிடம் வேலைக்கிருந்த இரு சாரதிகள் கூறியதாகவும் அப்புகாமி கமிஷனிடம் தெரிவித்தார்.

சட்டத்தரணி பாரிலட்: இதுபற்றி ஏன் பொலிசில் புகார் செய்யவில்லை.

சாட்சி: ராணுவத்தளபதிக்கு தகவல் கொடுத்தோம்; இது பொய்த் தகவல் என்று கூறி அவர் எம்மை நம்பவைத்து அனுப்பிவிட்டார்.

சட். பாரிலட்: அதன் பிறகும் அந்த வீடு எரிக்கப்பட்டது.

சாட்சி: ஆம்.

மாமடுவ சுப்பிரமணியம் வீட்டில் வேலைக்கிருந்த சாரதி விமலதாஸ என்பவர் சாட்சியமளிக்கையில், கலவரத்தின் போது தாம் சுப்பிரமணியத்தின் வீட்டுக்கு வேலைக்குச் சென்றதாகவும் அவருடைய வீட்டு அறை யொன்றில் இலபெட்டிகளில் கைக்குண்டுகளைக் கண்டதாகவும் கூறினார்.

பாரிலட்: என்ன கண்டீர்?

சாட்சி: குண்டுகள்.

கமிஷனர்: என்ன?

சாட்சி: கிரிகன் இருப்பதைக்கண்டேன். அதனுள் அந்த அறையில் 4000 தோட்டாக்கள் இருந்தன. பலஒலைக் கட்டில்களில் தோட்டாக்கள் இருந்தன. அங்கு அதிமுகமில்லாத 15-20 தமிழர்கள் நடமாடினர்.

(விசாரணை தொடர்கின்றது) [ஈ]

## தமிழர் முன்னேற்ற இயக்கம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ரயில்வே கமிஷன்முன் தமிழர் சோஷலிஸ முன்னணி சார்பில் திரு. யோகேந்திரா துரைசுவாமி, திரு. அரசுவால்டன், திரு. தெய்வேந்திரா துரைசுவாமி ஆகியோர் சாட்சியமளித்தனர் என்று வெளிவந்த செய்தியில் 'தமிழர் சோஷலிஸ முன்னணி'க்குப் பதிலாக "தமிழர் முன்னேற்ற இயக்கம்' என்றுதிருத்திவாசிக்கவும்.

## மணவாளக் கோலவிழா

[யாழ்ப்பாணம்]
கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் தேவஸ்தானம் கும்பாபிஷேக தினம் மணவாளக் கோலவிழா இன்று நடைபெறுகிறது.

பகல் 9 மணிக்கு சங்காபிஷேக பூசை நடைபெறும்.

இரவு 6-00 மணிக்கு திருவூஞ்சல், அடுத்து விசேட மேளக்கச்சேரி, வில்லுப்பாட்டு பக்திப்பாடல்கள் ஆகியவற்றின்பின் இரவு 11 மணிக்கு பெருமான் பூந்தண்டிகையில் வீதி உலா வருவார்.

## கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

[காரைநகர்]
காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினரால் நடாத்தப்பட்ட நீச்சல்போட்டியில் தோப்புக்காட்டைச் சேர்ந்த திரு. அப்புலிங்கம் என்பவர் மூன்றாம் இடத்தை பெற்று வெற்றிக்கேடயத்தை பரிசாகப் பெற்றுள்ளார்.

கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிநேகர் உற்பத்தி முகாமையாளர் திரு. தயாபரநாதன் தலைமையிலான சிநேகர் கோஷ்டியினர் வெற்றிபெற்று வெற்றிக்கேடயத்தைப் பெற்றனர். (உ)

## மேதின ஆலோசனை

[யாழ்ப்பாணம்]
தமிழ் தொழிலாளர் மேதின அமைப்புக்குழு நேற்று யாழ்ப்பாணத்தில் கூடி மேதின ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை நடத்தியது.

இக்குழுவின் அழைப்பை ஏற்று செந்தமிழர் இயக்கமும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டது.

'செந்தமிழர் இயக்கத்'தின் சார்பில் இயக்கப்பொதுச்செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் மற்றும் திருவாளர்கள் மா. செல்லத்தம்பி, என். கே. தர்மலிங்கம், ஆர். சிவகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டனர். [இ]

## கூட்டணிக் கிளைகள் ஊடாக...

[உருத்திரபுரம்]
கிளிநொச்சித் தொகுதியடங்கிலும் கூட்டணிக் கிளைகள் நிறுவி அவற்றின்மூலமே வேலை வழங்கக்குரிய ஆயிரம் விண்ணப்பப்பத்திரங்களும் வழங்கப்படவிருப்பதாக கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், வீண் வதந்திகளையும் பொய்ப்பிரசாரங்களையும் நம்பவேண்டாமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொகுதியெங்கும் கூட்டணிக் கிளைகள் நிறுவும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. [அ]

## யாருடையது?

இறந்த வெளி அரங்கிற்கும் புல்லுக்குளத்திற்குமிடையிலுள்ள வீதியில் திறப்புக்கோர்வை ஒன்று பண்ணை வீதியைச் சேர்ந்த செல்வன் சிவகுமார் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## மரண அறிவித்தல்

**ஓய்வுபெற்ற ஆசிரியர் அல்வாயூர் K.V. கந்தையா**

பாக்கியசுந்தரத்தின் அன்புக்கணவரும், வள்ளிமுத்துவின் சகோதரரும் பாலச்சந்திரன் (அமெரிக்கா) லோகேந்திரநாதன் (அமெரிக்கா), பாலசுப்பிரமணியம் (ஆசிரியர், மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்), பரமேஸ்வரி ஆகியோரின் தந்தையும் ராஜேந்திரன் (C.T.B. A. C, அனுராதபுரம்), மோனிக்கா (அமெரிக்கா); வசந்தாதேவி, கமலாவதி (ஆசிரியை, கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும், ஜேகினி, ரவீந்திரன், பிறேமினி, சுபாஷினி ஆகியோரின் பேரனுமாகிய K. V. கந்தையா காலமாகிவிட்டார். ஈமைக்கிரியைகள் 25-04-78 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி, கச்சாய் ரோட்டில் அவரது இல்லத்தில் நடைபெறும். 9121

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெள்ளோவில் மேலிவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna: Telegram 'Eelanaadu' Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.